ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2395/58 - 2024 අගෝස්තු මස 02 වැනි සිකුරාදා - 2024.08.02
2395/58 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### வரைவிலக்கணக் கட்டளைச் சட்டம்

வரைவிலக்கணக் கட்டளைச் சட்டத்தின் 18 ஆவது பிரிவின்கீழ் "சிறீ லங்கா ஸ்வதேசிய வைத்ய சபாவ"வின் பெயரை இரத்துச் செய்தல் சம்பந்தமாக பிரசுரிக்கப்பட்ட 2351/02 ஆம் இலக்க மற்றும் 2023.09.25 ஆந் திகதியுமுடைய வர்த்தமானி அறிவித்தலினை இரத்துச் செய்தல் சம்பந்தமான அறிவித்தல்

சமிதி கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 123) 3 ஆவது மற்றும் 4 ஆவது பிரிவுகள் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக 2317/70 - 2023 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்ட "சிறீ லங்கா ஸ்வதேசிய வைத்ய சபாவ" என்ற பெயரைக் கொண்ட சங்கமானது வரைவிலக்கணக் கட்டளைச் சட்டத்தின் 18 ஆவது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக சமிதி பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டதாகவும், அச்சங்கத்தின் பெயர் இரத்துச் செய்யப்பட்டதாகப் பிரசுரிக்கப்பட்ட 2351/02 ஆம் இலக்க மற்றும் 2023.09.25 ஆந் திகதியுமுடைய வர்த்தமானி அறிவித்தலானது இரத்துச் செய்யப்பட்டதாகவும் கைத்தொழில் அமைச்சர் டாக்டர் ரமேஷ் பதிரண ஆகிய நான் இத்தால் அறியத்தருகிறேன்.

டாக்டர் **ரமேஷ் பத்திரண**,
கைத்தொழில் அமைச்சர்.

கைத்தொழில் அமைச்சு,
இல. 73/1, காலி வீதி,
கொழும்பு 03,
2024, யூலை மாதம் 31 ஆந் திகதி.

EOG 08 - 0016